செ.வெ.எண் : 04 நாள் : 04.05.2020

# பத்திரிக்கைச் செய்தி

கொரோனா வைரஸ் நோய் தொற்று பாதிப்பை கட்டுப்படுத்த மே 17-ம்தேதி வரை ஊரடங்கு நீட்டிக்கவும், ஊரடங்கு காலங்களில் சில தளர்வுகளை அமல்படுத்திட தமிழக அரசு அறிவிப்புகள் வெளியிட்டுள்ளன. தமிழகத்தில் நோய் தொற்று அதிகம் உள்ள பகுதிகள் சிகப்பு மண்டலம் என்றும், நோய் தொற்று குறைவான பகுதிகள் ஆரஞ்சு மண்டலம் என்றும், நோய் தொற்று இல்லாத பகுதிகள் பச்சை மண்டலம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

நகராட்சி எல்லைக்கு அப்பாற்பட்ட பகுதிகளிலுள்ள தொழிற்சாலைகள் 50 சதவீதம் (குறைந்த பட்சம் 20 நபர்கள்) தொழிலாளர்களுடன் பணி செய்யலாம். மேலும், கிராமப்புற மற்றும் பேரூராட்சிகளிலும் தொழிற்சாலைகள் இயங்கலாம். நகராட்சிக்கு எல்லைக்குட்பட்ட பகுதிகளிலுள்ள டெக்ஸ் டைல் நிறுவனங்கள் இயங்க அனுமதி இல்லை.

மேலும், நகர்புறங்களில் கட்டுமான பணிகளில் அங்குள்ள தொழிலாளர்களை கொண்டு நடத்தலாம். அரசு மற்றும் பொதுத்துறை நிறுவனங்களுக்கான சாலை பணிகள் நடைபெறலாம். பிளம்பர், எலக்ட்ரீசன், ஏ.சி. மெக்கானிக், தச்சு பணி பார்பவர்கள் மாவட்ட ஆட்சியர் அவர்களின் அனுமதி பெற்று பணி மேற்கொள்ளலாம். பிரிண்டிங் பிரஸ் இயங்கலாம். கட்டுமான தொழிலுக்கு தேவையான ஹார்டுவேர், சிமெண்ட், கட்டுமான பொருட்கள் விற்பனை செய்யும் கடைகள் காலை 09.00 மணி முதல் 05.00 வரையும், வீட்டு உபயோ பொருட்கள், கைப்பேசி, கணினி விற்பனை மற்றும் பழுதுநீக்கும் கடைகள் நகர்ப்புறங்களில் காலை காலை 10.00 மணி முதல் 05.00 வரையும், கிராமப்புறங்களில் காலை 09.00 மணி முதல் 05.00 மணி வரையும் இயங்கலாம். குளிரூட்டப்பட்ட கடைகள், நகைக்கடை, ஜவுளிக்கடை, சூப்பர் மார்கெட் போன்ற கடைகள் இயங்க அனுமதி இல்லை. சலூன்கள், அழகு சாதன நிலையங்கள் இயங்க அனுமதி இல்லை. ஹோட்டல்கள் காலை 06.00 மணி முதல் இரவு 09.00 மணி வரை பார்சல் மட்டும் வழங்கலாம்.

மேற்கண்ட தளர்வுகள் அனைத்தும் கொரோனா தொற்று பாதிக்கப்பட்ட கட்டுப்பாட்டு மண்டல பகுதிகளுக்கு பொருந்தாது. கொரோனா பாதிக்கப்பட்ட பகுதிகளில் ஏற்கனவே கடைபிடிக்கப்பட்டு வரும் கடுமையான கட்டுப்பாடுகள் அதே நிலையிலேயே நீடிக்கும்.

எனவே, பொதுமக்கள் நோய் விளைவுகள் அறிந்து, அத்தியாவசிய பொருட்களை வாங்க செல்பவர்கள் முககவசம் அணிவதோடு, ஒருவருக்கொருவர் கூடி பேசுவதை தவிர்த்து, ஒருவருக்கொருவர் சமூக இடைவெளியினை கடைபிடிக்க வேண்டும், 60-வயதிற்குட்பட்ட நபர்கள், கர்ப்பிணிபெண்கள் கவனமாகவும், பாதுகாப்பாகவும் இருக்க வேண்டும். இந்த நோய் தொற்று பரவுவதை தவிர்க்க அனைவரும் வீட்டில் இருந்து, அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு முழுமையான ஒத்துழைப்பு தர வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**